Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 17

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

29 ரஜப் 1438 ஹிஜ்ரி கமரி 27 ஷஹாதத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

27 ஏப்ரல் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நீங்கள் உங்கள் உண்மையான உள்ளத்துடனும் முழு நம்பிக்கையுடனும் தீவிரமான முயற்சியுடனும் இறைவனுக்கு நண்பர்களாக ஆகி விடுங்கள்; அப்போது அவனும் உங்களுடைய நண்பனாக ஆகி விடுவான்.**

**வானத்தில் உங்கள் மீது கருணை உண்டாகும் பொருட்டு நீங்கள் உங்களின் கீழ் இருப்பவர்கள் மீதும் உங்களது மனைவியர் மீதும் உங்களது ஏழை சகோதரர்கள் மீதும் கருணை காட்டுங்கள்.**

**ஆற்றலுடையோருக்கு இறைவன் மீது தவக்குல் [நம்பிக்கை] வைப்பதே எல்லா உயரிய நிலைகளை விடவும் சிறந்த நிலையாகும்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

தீயவன் இறைவனுடைய நெருக்கத்தைப் பெற முடியாது. ஆணவம் கொண்டவன் அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. அநீதி இழைப்பவன் அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. நம்பிக்கை துரோகி அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. அவனுடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயல்கின்ற விஷயத்தில் தன்மான உணர்வை வெளிப்படுத்தாதவர் அவனது நெருக்கத்தை பெற முடியாது. நாய்களைப் போன்றும் எறும்புகளைப் போன்றும் கழுகளைப் போன்றும் உலகத்தின் மீது விழுகின்றவர்கள் உலக சுகபோகங்களில் மூழ்கியிருப்பவர்கள் அவனது நெருக்கத்தை பெற முடியாது. பரிசுத்தமற்ற ஒவ்வொரு கண்ணும் அவனை விட்டும் விலகியிருக்கிறது. தூய்மையற்ற ஒவ்வோர் இதயமும் அவனை அறிவதில்லை. எவர் அவனுக்காக நெருப்பில் விழுவாரோ அவர் அந்நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவார். எவர் அவனுக்காக கண்ணீர் வடிப்பாரோ அவர் பின்னர் மகிழ்ச்சியடைவார். எவர் அவனுக்காக உலகத்தை இழக்கத் துணிவாரோ அவ்வுலகம் அவருக்குக் கிடைக்கும். நீங்கள் உங்கள் உண்மையான உள்ளத்துடனும் முழு நம்பிக்கை -யுடனும் தீவிரமான முயற்சியுடனும் இறைவனுக்கு நண்பர்களாக ஆகி விடுங்கள்; அப்போது அவனும் உங்களுடைய நண்பனாக ஆகி விடுவான். வானத்தில் உங்கள் மீது கருணை உண்டாகும் பொருட்டு நீங்கள் உங்களின் கீழ் இருப்பவர்கள் மீதும் உங்களது மனைவியர் மீதும் உங்களது ஏழை சகோதரர்கள் மீதும் கருணை காட்டுங்கள். உண்மையாகவே நீங்கள் அவனுக்காகவே ஆகி விடுங்கள். அப்போது அவனும் உங்களுக்காகவே ஆகி விடுவான்.

இவ்வுலகமானது ஆயிரக்கணக்கான ஆபத்துக்கள் சோதனை -களால் நிரம்பிய இடமாக இருக்கிறது. அவற்றில் ஒன்று பிளேக் நோயும் ஆகும். ஆகவே இறைவன் இந்த ஆபத்துக்களை உங்களிலிருந்து தூரமாக்கும் பொருட்டு அவனோடு உண்மையான உள்ளத்துடன் உறவு வைக்க முயலுங்கள். வானத்திலிருந்து கட்டளை பிறப்பிக்காதவரை எவ்வித ஆபத்தும் பூமியில் உண்டாவதில்லை. மேலும் வானத்திலிருந்து கருணை இறங்காதவரை எந்தவோர் அபாயமும் நீங்குவதில்லை. ஆகவே நீங்கள் கிளையைப் பிடிப்பதற்குப் பதிலாக வேரைப் பற்றிப் பிடிப்பதே அறிவுடைமையாகும். மருந்தையும் இதர வழிமுறைகளையும் பயன்படுத்துவதற்கு நீங்கள் தடை செய்யப்படவில்லை. ஆனால் அவற்றின் மீது முழு நம்பிக்கை வைப்பது தடை செய்யப்பட்டிருக்கின்றது. இறுதியில் இறைவனது நாட்டம் எதுவோ அதுவே நடக்கும். ஆற்றல் உடையோருக்கு இறைவன் மீது தவக்குல் (நம்பிக்கை) வைப்பதே எல்லா உயரிய நிலைகளை விடவும் சிறந்த நிலையாகும்.

உங்களுக்குக் கூற வேண்டிய முக்கிய போதனை என்னவெனில், திருக்குர்ஆனை ஒதுக்கப்பட்ட வேதத்தைப் போல் கை விட்டு விடாதீர்கள் என்பதாகும். ஏனெனில் உங்களின் வாழ்வு அதிலேயே அடங்கி இருக்கிறது. எவர்கள் திருக்குர்ஆனை கண்ணியப்படுத்துவார்களோ அவர்கள் வானத்தில் கண்ணியப்படுத்தப்படுவார்கள். எவர்கள் ஹதீஸ் மற்றும் பிற சொற்களை விட திருக்குர்ஆனுக்கு முக்கியத்துவம் அளிப்பார்களோ அவர்கள் வானத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படுவார்கள். பூமியில் திருக்குர்ஆனைத் தவிர மனித குலத்திற்கு வேறு எந்த வேத நூலும் இல்லை. ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர ஆதமின் சந்ததிகளுக்கு இனி எந்த இறை தூதரும் பரிந்துரைப்பவரும் இல்லை. ஆகவே நீங்கள் இந்த மாபெரும் கம்பீரமான நபியுடன் உண்மையான நேசம் கொள்ள முயலுங்கள். அவருக்குக் கொடுக்கப்படும் மதிப்பை விட மேலான மதிப்பை வேறு எவருக்கும் கொடுக்காதீர்கள். அப்போதுதான் நீங்கள் வானத்தில் இரட்சிக்கப்பட்டவர்களாக எழுதப்படுவீர்கள். இரட்சிப்பு என்பது மரணத்திற்குப் பின் வெளியாகக் கூடிய ஒன்றன்று என்பதனை நினைவில் கொள்ளுங்கள். உண்மையான இரட்சிப்பானது தன் ஒளியை இவ்வுலகிலேயே வெளிப்படுத்திக் காட்டி விடுகிறது.

இரட்சிப்பு பெற்றவர் யார்? உண்மையான இறைவன் ஒருவன் இருக்கிறான் என்றும் இறைவனுக்கும் அவனது அனைத்து படைப்பினங் -களுக்குமிடையில் பரிந்து பேசக்கூடியவர், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களேயென்றும் வானத்தின் கீழ் அவர்களுக்கு சம நிலையிலுள்ள வேறு எந்த நபியும் இல்லை என்றும் திருக்குர்ஆனுக்கு ஒப்பான வேறு எந்த வேத நூலும் இல்லை என்றும் நம்பிக்கை வைக்கக் கூடியவர்களே இரட்சிப்புப் பெற்றவர்களாவர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவரும் என்றென்றும் உயிர் வாழ வேண்டுமென்று அல்லாஹ் நாடவில்லை. ஆனால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த திரு நபி (ஸல்) அவர்கள் நிரந்தரமாக உயிரோடிக்கிறார்கள். எனவே அந்த புனித ஆன்மா கொண்டு வந்த ஷரீஅத் என்னும் இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களையும் அவர்களின் ஆன்மீக அருட்கொடைகளையும் இறுதி நாள் வரை நிலைத்திருக்கச் செய்வதன் மூலம் அவர்கள் என்றென்றும் உயிரோடிருக்கக்கூடிய அடித்தளத்தை இறைவன்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

மார்ச் 23 அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்றில் மிக முக்கியமான நாளாகும். ஏனென்றால், அந்த நாளில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் பைஅத்தின் மூலமாக முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கான அடித்தளத்தை அமைத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்: தோன்றவிருந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி மேலும் எவரைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்தார்களோ அவர் நானே ஆவேன். மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஏகத்துவத்தை நிலைநாட்டி, உள்ளங்களில் இறை நேசத்தை உருவாக்கவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: எனக்கு இந்த உயர் தகுதியும், மேன்மையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதாலும் அன்னாரின் மீது நான் கொண்ட உண்மையான அன்பினாலும் கிடைத்துள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு உயர் தகுதியை வழங்குகின்றனர் எனக் கூறுபவர்கள் அநீதியிழைப்பவர்களாவர் - நவூதுபில்லாஹ்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகள், அன்னாரது வாழ்வில் நடந்த சம்பவங்களின் ஒளியில் ஹுஸூர் (அலை) அவர்களது இறைநேசம், பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அன்னாருக்கு இருந்த பேரன்பு, மனித இனத்துடன் அன்னாருக்கு இருந்த அனுதாப உணர்வு ஆகியவற்றைப் பற்றி ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அவற்றை சான்றாகக் காட்டி ஜமாஅத் சகோதரர்கள் தங்களது பொறுப்புகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துமாறு ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்.

இந்த விஷயங்களை செவிமடுத்த பிறகும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீது ஒருவர் ஆட்சேபனை செய்கின்றார் என்றால் அவர் அநீதிழைப்பவரும், அறிவீனரும், குழப்பவாதியும் ஆவார். இது தவிர நாம் வேறொன்றும் கூறுவதற்கில்லை. அவர்கள் தம்மை, பெரும் பெரும் ஆலிம்கள் என்று கூறி வலம் வருகின்றனர். இனி அவர்களின் விவகாரம் இறைவனிடம் உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் ஏகத்துவத்தை நிலைநாட்டுதல் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேன்மையை தெளிவுபடுத்தி உலகை அன்னாரின் கொடியின் கீழ் கொண்டு வருதல் ஆகும். அத்துடன் அடியார்களுக்குரிய உரிமையை வழங்குதல் மற்றும் அல்லாஹ்வின் படைப்பினங்களின் மீதான அனுதாப அறிவை வழங்குதல் மேலும் அதன்படி மனித இனத்தை செயல்பட வைப்பதும் அன்னாரின் வருகையின் நோக்கமாகும்.

அன்னாரின் பிரச்சாரத்தை அழிப்பதற்கு எண்ணற்ற முஸ்லிம் ஆலிம்கள் முயற்சி செய்தனர். பெயர் தாங்கி ஆலிம்கள் அன்னாரை எதிர்த்தார்கள். அன்னார் மீது குஃப்ர் ஃபத்வா வழங்கப்பட்டது. இப்போது வரை வழங்கி வருகின்றனர். அதன் விளைவாக இன்று வரை முஸ்லிம் நாடுகளிலும் ஏனைய உலக நாடுகளிலும் நமக்கு எதிர்ப்பு ஏற்படுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் போதனையின் தாக்கத்தின் காரணமாகவே நாம் எதிரிகளின் ஏச்சுப் பேச்சுகளுக்கு எதிரில் நமது நல்லொழுக்கத்தின் தரத்தை கைவிட்டு விடுவதில்லை. சட்டத்தையும் நாம் கையில் எடுப்பது கிடையாது. இந்த காலத்தில் மஸீஹ், மஹ்தி மற்றும் நீதி தீர்ப்பவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களே ஆவார்கள். மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் ஏகத்துவத்தை நிலைநாட்டுவது மற்றும் பூமியில் அல்லாமல் உள்ளங்களில் நிலைபெற வேண்டிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆட்சியும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மூலமாகவும் அன்னாரின் ஜமாஅத்தின் மூலமாகவும் மட்டுமே நிலைபெற முடியும். இதை தவிர்த்து எந்த வாளின் மூலமோ துப்பாக்கியின் மூலமோ அல்லது அதிகாரத்தின் மூலமோ அல்லது தீவிரவாதத்தைப் பரப்புவதன் மூலமாகவோ அல்லது இஸ்லாத்தின் பெயரால் அப்பாவி மக்களை கொன்று குவிப்பது மூலமாகவோ நிலைபெற முடியாது.

ஐரோப்பாவில் இஸ்லாத்தின் பெயரால் தனி நபர் அல்லது அமைப்புகள் நடத்துகின்ற தாக்குதலாக இருக்கட்டும் அல்லது இங்கு இலண்டனில் இரண்டு நாட்களுக்கு முன்பு அநியாயமாக அப்பாவிகள் கொலை செய்யப்பட்டார்கள். சாலையில் சென்ற பாதசாரிகள் மீது காரை ஏற்றி விட்டனர். காவல் துறையைச் சார்ந்தவரும் கொலை செய்யப்பட்டார். இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் தவறாக வழி நடத்தி முஸ்லிம்களின் உள்ளங்களில் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை உரையச் செய்வதற்கு பகரமாக அநீதி மற்றும் காட்டுமிராண்டித்தனமான எண்ணங்களை அவர்களின் உள்ளங்களில் உருவாக்கி விட்டனர்.

அப்பாவி மக்கள் கொல்லபடுகின்ற இந்த செயல்களுக்கு நாம் கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும். இதற்கெதிரில் குரல் எழுப்ப வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் நமது பணியாகும்.

அல்லாஹ்வின் அருளால் மஸீஹால் விதைக்கப்பட்ட அந்த விதை வளர்ந்து மலர்ந்து பரவி வருகிறது. நாம் அதன் பசுங்கிளைகளாக மாற வேண்டும் என்றால், நமது பணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் நூல்களிலிருந்து கூறப்பட்டது போன்று அல்லாஹ்வின் மீதான அன்பு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது நேசம் மற்றும் சக மனிதர்கள் மீதான அனுதாபம் நமது ஒவ்வொரு செயலிலும் வெளிப்பட வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான பாக்கியத்தை வழங்குவானாக!

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**24 மார்ச் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **24 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

நேற்று மார்ச் 23 ஆம் தேதியாக இருந்தது. மார்ச் 23 அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்றில் மிக முக்கியமான நாளாகும். ஏனென்றால், அந்த நாளில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் பைஅத்தின் மூலமாக முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கான அடித்தளத்தை அமைத்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்: தோன்றவிருந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி மேலும் எவரைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்தார்களோ அவர் நானே ஆவேன்.

மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஏகத்துவத்தை நிலைநாட்டி, உள்ளங்களில் இறை நேசத்தை உருவாக்கவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்.

ஐரோப்பா மற்றும் ஆசியா போன்ற பூமியின் பல்வேறு இடங்களில் வசிக்கும் மக்களில் நல்லியல்பு கொண்ட அனைவரையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்க்க வேண்டும் எனவும், தனது அடியார்களை ஒரே மார்க்கத்தின் கீழ் ஒன்று கூட்ட வேண்டும் எனவும் இறைவன் விரும்புகிறான். இதுவே இறைவனின் நோக்கமாகும். மேலும் இந்த நோக்கத்திற்காகவே நான் உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளேன்.

எனவே நீங்கள் இந்த நோக்கத்தைப்பின்பற்றுங்கள். ஆயினும் மென்மை, நல்லொழுக்கம் மற்றும் துஆவில் அழுத்தம் கொடுத்தவாறு பின்பற்ற வேண்டும்.

அடுத்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: எனக்கு இந்த உயர் தகுதியும், மேன்மையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதாலும் அன்னாரின் மீது நான் கொண்ட உண்மையான அன்பினாலும் கிடைத்துள்ளது.

எனவே, அந்த தூதர் (ஸல்) அவர்களின் மீது அன்பு கொள்ளுங்கள். அன்னாரைப் பின்பற்றுங்கள் என்று முழு உலகத்திற்கும் தூதுச் செய்தியாக உள்ளது. அதன் மூலம் இறைவனுடனும் உங்களுக்கு தொடர்பு ஏற்படும். மேலும் நீங்கள் உண்மையான ஏகத்துவவாதியாகவும் ஆக முடியும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆதமின் மக்களுக்கு முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர இப்போது எந்தத் தூதரும், பரிந்துரை செய்பவரும் இல்லை. எனவே ஆற்றலும் கம்பீரமுமிக்க அந்த தூதரிடம் உண்மையான அன்பு கொள்ள முயலுங்கள். அவரை தவிர வேறெவருக்கும்

அவரை விட எவ்வகை மேன்மையும் வழங்காதீர்கள். இதனால் நீங்கள் விண்ணில் இரட்சிப்பு பெற்றவரக எழுதப்படுவீர்கள்.

மேலும் நினைவில் கொள்ளுங்கள். இரட்சிப்பு என்பது மரணத்திற்குப் பிறகு வெளிப்படுவதல்ல. மாறாக, இவ்வுலகில் தனது ஒளியைக் காட்டுவதே உண்மையான இரட்சிப்பாகும். இரட்சிப்பு கிடைக்கப் பெற்றவர் யார்? இறைவன் இருக்கின்றான் என்பது உண்மை என்றும், அவனுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் இடையே பரிந்துரை செய்பவர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒருவரே என்றும், வானத்தின் கீழ் அம்மாநபிக்கு நிகரான தகுதியைப் பெற்ற தூதர் எவரும் இல்லை என்றும், திருக்குர்ஆனுக்கு நிகரான மறை வேறொன்றும் இல்லை என்றும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறெவரும் கொள்கையாலும், கோட்பாடாலும் நிரந்தரமாக உயிர் வாழ்வதை இறைவன் விரும்பவில்லை என்றும், உறுதியாக நம்புவரே இரட்சிப்புப் பெற்றவராவார். (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 13-14)

இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டிருந்த அன்பு மற்றும் மேன்மை ஆகும். இதனை எப்போதும் அன்னார் முழுமையாக வெளிப்படுத்தி வந்துள்ளார்கள். மேலும் தன்னை ஏற்றுக் கொண்டவர்களும், இந்த நேசம் மற்றும் கண்ணியத்தை தமது கருத்தில் கொள்ள வேண்டும் என அன்னார் அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உயர் தகுதியை வழங்குகின்றனர் எனக் கூறுபவர்கள் அநீதியிழைப்பவர்களாவர் –நவூதுபில்லாஹ்.

இன்றைய நாட்களில் அல்ஜீரியாவிலும் இந்த பழி சுமத்தப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அஹ்மதிகள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். பெண்கள் மீது கை வைக்கவும், வழக்கு தொடரவும் இவர்கள் தொடங்கி விட்டனர். பல மணி நேரங்கள் பயணம் செய்ய வைத்து பால்குடி குழந்தைகளுடன் தாய்மார்களை வேறு நகரங்களுக்கு அழைத்துச் சென்று வழக்கு தொடுக்கப்பட்டு சிறையில் அடைக்கின்றனர்.

ஆனால் எனக்கு அந்த பெண்களும் கூட இந்த தூதுச் செய்தியை அனுப்புகின்றனர். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அன்னாரை ஏற்றுக் கொண்ட பிறகே எங்களுக்கு உண்மையான ஏகத்துவத்தைப் பற்றியும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மையான மதிப்பும், மரியாதையும், அன்னாரின் மீதான அன்பின் உண்மைத்தன்மையும் எங்களுக்கு தெரிய வந்துள்ளது. அவ்வாறிருக்க எங்களால் எவ்வாறு எமது ஈமானிலிருந்து விலகி நிற்க இயலும்?

அல்லாஹ்வே! இந்த அஹ்மதிகளுக்கு அவர்களின் நாடுகளில் எளிமையை ஏற்படுத்துவாயாக! என துஆ செய்கின்ற அதே தருணத்தில், அல்லாஹ்வே! முஸ்லிம்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்குவாயாக என்றும் நாம் துஆ செய்கின்றோம். அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப ஏகத்துவத்தை நிலைநாட்டவும், இஸ்லாத்தின் மறுமலச்சிக்காகவுமே அன்னார் தோன்றியுள்ளார்கள். அல்லாஹ்வின் மீதான அன்பு மற்றும் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கான அன்னாரின் துடிப்பின் ஒரு பொலிவு இந்த சொற்களிலிருந்து நமக்கு கிடைக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வை நோக்கிக் கூறுகின்றார்கள்: இறைவா! நீ பார்ப்பாயாக! பறவை தனது கூட்டினை நோக்கிப் பறந்து செல்வது போன்று எனது ஆன்மா உன்னை நோக்கி பறந்து வருகின்றது. எனவே உனது வல்லமையின் அடையாளத்திற்கு நான் விருப்பம் கொள்கின்றேன். ஆயினும் எனக்காகவோ எனது கண்ணியத்திற்காகவோ ஆசை கொள்ளவில்லை. மாறாக, மக்கள் உன்னை அடையாளங் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காகவும், உனது தூய வழியினை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், நீ அனுப்பிய நபரை பொய்ப்படுத்தி மக்கள் நேர்வழியில் இருந்து விலகிச் சென்று விடக் கூடாது என்பதற்காகவுமே நான் அவ்வாறு ஆசை கொண்டேன். நீ என்னை அனுப்பியிருக்கிறாய்; எனக்கு ஆதரவாக மாபெரும் அடையாளங்களைக் காட்டியிருக்கிறாய் என நான் சாட்சி பகர்கிறேன். எந்த அளவுக்கென்றால் முன்னறிவிப்பிற்கேற்ப ரமலானில் குறிப்பிட்ட நாட்களில் கிரகணத்திற்குட்பட வேண்டும் என நீ சூரியனுக்கும் சந்திரனுக்கும் கட்டளையிட்டாய். நீயே எனது இறைவனாவாய் என நான் உன்னை அடையாளம் காண்கின்றேன். எனவே எனது ஆன்மாவானது பால்குடி குழந்தை தனது தாயைக் கண்டதும் துள்ளுவதைப் போன்று உனது பெயரைக் கேட்டதும் துள்ளிக் குதிக்கின்றது. ஆனால் பெரும்பாலான மக்கள் என்னை அடையாளம் காணவில்லை; என்னை ஒப்புக் கொள்ளவுமில்லை. (திர்யாகுல் குலூப். ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 511)

இந்தக் கூற்றிலிருந்து அல்லாஹ்வின் அன்பு மற்றும் அவனது மகத்துவத்தை நிலைநாட்ட அன்னாரிடம் காணப்பட்ட துடிப்பு நமக்கு தென்படுகிற அதே தருணத்தில் மனித இனத்தைக் காப்பாற்றுவதற்கான அன்னாரின் கடுமையான வேதனையும் நமக்கு தென்படுகின்றது. அவ்வாறு எப்படி இல்லாமல் இருக்க முடியும்? ஏனென்றால் அன்னார்தானே இறுதிக் காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் உள்ளங்களில் இறை அன்பை உருவாக்கக்கூடியவராக உள்ளார்கள்? இறை அன்பை பிறரின் உள்ளங்களில் நிலைநாட்டுபவராக மட்டும் இல்லாமல் அன்னாரும் இறை அன்பில் மூழ்கியவராகவே திகழ்ந்தார்கள். அல்லாஹ்வின் அன்பு மற்றும் நேசத்திற்கான நெருப்பின் பொறி பிறரின் உள்ளங்களிலும் ஏற்பட்டு விட வேண்டும் என்ற துடிப்பு எந்த அளவுக்கு அன்னாருக்கு இருந்ததென்றால் அது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்:

தனது ஓர் இறைவன் இருக்கின்றான். அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் படைத்தவன் ஆவான் என இதுவரை அறியாத மனிதன் மிகவும் துர்பாக்கியசாலி ஆவான். எமது சொர்க்கம் எமது இறைவனே! எமது பேரின்பங்கள் அனைத்தும் எமது இறைவனிடத்தில் உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டிருக்கிறோம். அவனிடத்தில் ஓர் அழகினைக் கண்டோம். இந்தச் செல்வம் உயிரைக் கொடுத்தேனும் பெறத்தக்கது. ஒருவன் தன்னை முற்றிலும் இழந்தாகிலும் பெறத்தக்கது இம்மாணிக்கம்! இழப்பிற்குள்ளானவர்களே! அந்த நீரூற்றின் பக்கம் விரைந்து ஓடுங்கள். அது உங்கள் தாகத்தைத் தணிக்கும். அது வாழ்வளிக்கும் நீரூற்றாகும். அது உங்களைக் காப்பாற்றும். நான் என்ன செய்வேன்? எவ்வாறு இந்த நற்செய்தியினை உள்ளங்களில் உறையச் செய்வேன்? இதுதான் உங்கள் இறைவன் என்று மக்கள் கேட்கும் பொருட்டு கடை வீதிகளில் எந்த முரசு கொண்டு அறிவிப்பு செய்வேன்? மக்கள் கேட்கும் பொருட்டு அவர்களின் காதுகள் திறக்க எந்த மருந்தைக் கொண்டு சிகிச்சை செய்வேன்? (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 21-22)

பாருங்கள்! இந்த சொற்களின் மறைவில் எந்த அளவுக்கு வேதனை உள்ளது!! ஒவ்வொரு சொல்லிலும் வேதனையின் பல அம்சங்கள் ஒளிந்திருக்கின்றன என்றே கூறவேண்டும். ஒவ்வொருவரும் தத்தமது அறிவு மற்றும் ஞானத்திற்கேற்ப அதன் ஆழத்திற்குச் செல்ல முடியும். ஆனால் தமது ஆற்றலுக்கேற்ப எந்த அளவிற்கு ஒரு நபர் அதன் ஆழத்தை அடைவாரோ அந்த அளவிற்கு ஆன்மீகத்தில் அசாதாரண உயர்வையும், முன்னேற்றத்தையும் பெறக்கூடியவராக அவர் திகழ்வார்.

அடுத்து இறைவணக்கம் மற்றும் இறைநேசத்திற்கான அறிவுரை செய்தவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் இறைவனுக்கு உரியவர்களாக ஆகி விட்டால் அவன் உங்களுக்கே உரியவன் என்பதை உறுதியாக உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் தூங்கிக்கொண்டிருப்பீர்கள்; இறைவன் உங்களுக்காக விழித்திருப்பான். நீங்கள் எதிரியிடமிருந்து கவனமற்று இருப்பீர்கள். ஆனால் இறைவன் அவர்களை உற்று நோக்கிக் கொண்டிருப்பான். எதிரியின் சூழ்ச்சியை முறியடிப்பான். உங்களின் இறைவனிடத்தில் என்னென்ன வல்லமைகள் உள்ளன? என்பதை இதுவரை நீங்கள் அறியவில்லை. நீங்கள் அறிந்திருந்தால் உலகிற்காக உங்களை மிகவும் கவலைக்குள்ளாக்கும் ஒருநாள் கூட உங்களிடம் வந்திருக்காது. ஒரு கருவூலத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு நபர், ஒரு பைசா தொலைந்து போனதால் அழுவாரா? கதறி கூப்பாடு போடுவாரா? தன்னை மாய்த்துக் கொள்ளத் துணிவாரா?

அடுத்து, இறைவன் உங்களின் ஒவ்வொரு தேவையின்போதும் உங்களுக்கு உதவி செய்பன் ஆவான். அந்த பொக்கிஷத்தை நீங்கள் அறிந்திருந்தால் உலகிற்காக நீங்கள் உங்களை ஒருபோதும் மாய்த்துக் கொள்ள மாட்டீர்கள். இறைவன் மிகவும் நேசத்திற்குரிய பொக்கிஷம் ஆவான். அவனை கண்ணியப்படுத்துங்கள். அவன் உங்களின் ஒவ்வோர் அடியிலும் உங்களின் உதவியாளனாவான். அவன் அன்றி நீங்கள் ஒன்றுமேயில்லை. உங்களின் காரணிகளும் திட்டங்களும் ஒரு பொருட்டே அல்ல.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்நிய சமுதாயத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றாதீர்கள். அவை முற்றிலும் காரணிகளால் தம்மை மாய்த்துக் கொண்டு விட்டன. உலகமும் பௌதீகத்தையும் தவிர்த்து அவர்களிடம் வேறெதுவுமில்லை. பாம்பு மண்ணைத் தின்பது போன்று அந்த சமுதாயங்கள் உலகியல் காரணிகளில் மூழ்கிக் கிடக்கின்றன. நாய்களும், நரிகளும் பிணங்களை உண்பதைப் போன்று அந்த சமுதாயங்கள் மரணித்தவற்றையே உணவாகக் கருதி நிற்கின்றன. அவர்கள் இறைவனிடமிருந்து வெகு தொலைவில் வீழ்ந்து கிடக்கின்றனர். நீங்கள் நடுநிலையுடன் காரணிகளைப் பயன்படுத்துவதை நான் உங்களுக்குத் தடை செய்யவில்லை. பணி செய்வதையும், பொருட்களைப் பயன்படுத்துவதையும், உலகியல் விஷயங்களைப் பயன்படுத்துவதையும் நான் தடுக்கவில்லை. மாறாக, நீங்கள் அந்நிய சமுதாயங்களைப்போன்று காரணிகளின் அடிமைகளாக மாறுவதையே நான் தடை செய்கிறேன். காரணிகளை உருவாக்குகின்ற இறைவனையே நீங்கள் மறந்து விடுவதைத்தான் நான் தடை செய்கிறேன். இந்தக் காரணிகளையும் உலகியல் பொருட்களையும் இறைவனே உருவாக்கித் தருகின்றான். எனவே நீங்கள் உங்களை அதில் மாய்த்துக் கொள்ளாதீர்கள். மாறாக, அதனை உங்களுக்கு உருவாக்கித் தருகின்ற இறைவனின் பக்கம் பாருங்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களுக்கு கண்கள் இருந்திருந்தால் இறைவன் மட்டுமே இருக்கின்றான். மற்றவை அனைத்தும் பொருளற்றவை என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள். (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 21-22)

எனவே, இறைவனுடன் நமக்கு இந்த அளவிற்கு தொடர்பு இருக்க வேண்டும். அதனை நாம் அடைய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்கள் இந்த தரத்தை அடைய வேண்டும் என விரும்புகின்றார்கள். நான் தற்போது குறிப்பிட்டதுபோன்று ஏகத்துவத்தை

நிலைநாட்டுகின்ற பொறுப்பும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான பொறுப்பும் ஹுஸூர் (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் காரணத்தால் தரப்பட்டுள்ளது. இந்த அன்பு மற்றும் நேசத்திற்கான காட்சி அன்னாரிடம் எங்கனம் தென்படுகிறது எனக் கேட்டால் அதற்கு ஏராளமான சம்பங்கள் உள்ளன.

ஒரு சம்பவத்தை அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: ஒரு முறை ஹுஸூர் (அலை) அவர்கள் மஸ்ஜித் முபாரக்கின் மேலே தனிமையில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்லாமல் ஏதோ முனுமுனுத்தவாறு இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. ஹுஸூர் அவர்களுக்கு ஏற்பட்ட வேதனை என்ன? என்று அந்த நபர் கேட்ட போது ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்தின்போது ஹஸ்ஸான் பின் சாபித் எழுதிய கவிதையை நான் படித்துக் கொண்டிருந்தேன். அந்த கவிதை இதுவாகும்.

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِيْ فَعَمِيَ عَلَيْكَ النَّاظِرُ

مَنْ شَاءَ بَعْدَكَ فَلْيَمُتْ فَعَلَيْكَ كُنْتُ أُحَاذِرُ

அதாவது, இறைவனின் அன்பிற்குரிய தூதரே! நீங்கள் என் கண்ணின் கருவிழியாய்த் திகழ்ந்தீர்கள். இன்று உங்களது மரணத்தின் காரணமாக அது குருடாகி விட்டது. உங்களுக்குப் பிறகு இனி எவர் மடிந்தாலும் மடியட்டும். எனக்கோ உங்களது மரணத்தைப் பற்றிய அச்சமே ஆட்கொண்டிருந்தது; அது நிகழ்ந்தும் விட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் இந்த கவிதையை படித்துக் கொண்டிருந்தபோது இந்த கவிதை எனது நாவில் இருந்து வெளிப்பட்டிருக்கக் கூடாதா என்ற எண்ணம் எனது உள்ளத்தில் எழுந்தது. இந்த கவிதையைப் படித்துக் கொண்டிருந்தபோது அன்னாரின் கண்களில் இருந்து வழிந்தோடிய கட்டுக்கடங்காத கண்ணீர் அன்னாரின் உள்ளத்தின் நிலையை வெளிப்படுத்துகின்றது. நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட நாம் உயர்ந்த அந்தஸ்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கி இருப்பதாக ஆட்சேபனை செய்யக்கூடிய எதிரிகள் அன்னாரின் இந்த அன்பு மற்றும் நேசத்திற்கு அருகில் கூட நெருங்க முடியாது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் அன்னாரின் இந்த உணர்வுப் பூர்வமான நிலையை மிக வேதனை நிறைந்த வகையில் படம்பிடித்து காட்டுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எல்லா விதமான கடினத்தையும் எதிர்கொண்டார்கள். அன்னாருக்கு எதிரில் எண்ணற்ற எதிர்ப்பின் புயல்கள் வீசின. அன்னார் எண்ணற்ற துன்பங்கள் மற்றும் வேதனைகளைக் கடந்தார்கள். அன்னார் மீது கொலை வழக்கு தொடரப்பட்டது. அன்பிற்குரியவர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் குழந்தைகளின் மரணத்தின் காட்சியைக் கூட அன்னார் கண்டார்கள். ஆனால் அன்னாருக்கு அருகில் இருந்தவர்கள் அன்னாரின் முகத்திலும் கண்களிலும் உள்ளத்திலும் வேதனை வெளிப்பட்டதைக் கண்டதேயில்லை. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பின் வெளிப்பாட்டிற்கான இந்த சம்பவத்தின்போது அன்னாரின் கண்களில் கண்ணீர் வெள்ளம்போன்று பெருக்கெடுத்து ஓடியது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரதே தய்யிபா பக்கம் 28-30) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான அன்பிற்கான காட்சிகள் அன்னாரின் எழுத்துக்களிலும் மல்ஃபூஸாத்திலும் ஏராளம் கிடைக்கின்றன.

ஓரிடத்தில் இஸ்லாத்தின் எதிரிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது எள்ளி நகையாடிய விஷயத்தை செவிமடுத்தபோது தனது உள்ளத்தின் நிலையை அன்னார் வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

நமது தூய தூதர் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு எதிராக இந்த மக்கள் செய்கின்ற எள்ளி நகையாடலை விட வேறெந்த விஷயமும் எனது உள்ளத்திற்கு வேதனையை ஏற்படுத்தியதில்லை. மனிதர்களில் சிறந்த மனிதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நற்பண்புகளுக்கு எதிராக இவர்கள் செய்கின்ற வேதனை மிகுந்த ஏச்சுப் பேச்சுக்கள் எனது இதயத்தை மிகவும் காயப்படுத்தி விட்டன. இறைவன் மீது ஆணையாக! எனது அனைத்து சந்ததிகளும், சந்ததிகளின் சந்ததிகளும், எனது அனைத்து நண்பர்களும், உதவியாளர்களும் எனது கண்களுக்கு முன்னால் கொலை செய்யப்பட்டால், எனது கைகளும், கால்களும் துண்டிக்கப்பட்டால், என் கண் விழிகள் பிடுங்கி எறியப்பட்டால், எனது அனைத்து மகிழ்ச்சியும், வசதிவாய்ப்பும் என்னிடம் இருந்து பறிக்கப்பட்டு விட்டால் எனக்கு ஏற்படும் வேதனையை விட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது செய்யப்படும் அசுத்தமான தாக்குதல்களால் ஏற்படும் வேதனையே எனக்கு வலி மிகுந்ததாக இருக்கும்.

எனவே எங்களது விண்ணின் எஜமானனே! நீ எங்கள் மீது கருணை மற்றும் உதவியின் பார்வையை செலுத்துவாயாக! மேலும் எங்களுக்கு இந்த மாபெரும் சோதனையிலிருந்து இரட்சிப்பை வழங்குவாயாக! (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 15. அரபி சொற்றொடரின் உருது மொழியாக்கம் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபாவின் பக்கம் 43-44 -ல் இடம்பெற்றுள்ளது)

இதுபோன்ற உணர்வை வெளிப்படுத்துகின்ற எவரும் உள்ளனரா? அன்பு மற்றும் நேசத்திற்கான வாதம் செய்பவர்கள் பலரும் உள்ளனர். கத்மே நுபுவ்வத் என்ற பெயரால் கொலையும் குழப்பமும் செய்பவர்கள் அதிகம் உள்ளனர். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தை உலகம் ஏற்றுக் கொள்ளச் செய்ய அவர்கள் என்ன முயற்சி செய்துள்ளார்கள்? இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனை உலகில் பரப்ப அவர்கள் என்ன செய்துள்ளார்கள்? அன்னாரின் சொற்கள் வெறும் வாயளவிலான வாதமாக மட்டும் இருக்கவில்லை. மாறாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அன்னாரின் அன்பு மற்றும் நேசத்திற்கான வாதம் அன்னாரின் உள்ளத்தின் குரல் மற்றும் அன்னாரின் ஒவ்வொரு சொல் மற்றும் செயலிருந்து நிரூபணமாகின்றது என அன்னாருடன் தொடர்பு கொண்டிருந்தவர்களும், ஏன் அந்நியர்களும் கூட சாட்சி பகர்ந்துள்ளனர்.

அந்த வகையில் அதனை வெளிப்படுத்தியவாறு அமிர்தசரஸின் வகீல் எனும் பெயர் கொண்டிருந்த அஹ்மதியல்லாதவர்களின் ஒரு பத்திரிகை அன்னாரின் மரணத்தின்போது இவ்வாறு எழுதியது: மிர்ஸா சாஹிபின் மரணம் என்பது அன்னாருடன் கடுமையான கருத்து வேறுபாடு கொண்டிருந்த போதிலும் முஸ்லிம்களுக்கு குறிப்பாக ஒளிமையமான சிந்தனை கொண்ட முஸ்லிம்களுக்கு அவர்களின் ஒரு மாபெரும் மனிதர் அவர்களை விட்டுப் பிரிந்து விட்டார் என்ற உணர்வை ஏற்படுத்தி விட்டது. மேலும் அத்துடன் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிரான போட்டியில் அன்னாரின் இருப்புடன் தொடர்புடைய அழகு மிக்க இஸ்லாத்தின் தற்காப்பு என்பதும் முடிந்து விட்டது. தொடர்ந்து அந்த பத்திரிகை மிர்ஸா சாஹிபின் எழுத்துக்களும், நூல்களும் இன்று தனது கடமையைச் செய்து முடித்து விட்டன. அவை நமக்கு அன்னாரின் மேன்மை மற்றும் முக்கியத்துவத்தை உணரச் செய்து விட்டன. எதிர்காலத்தில் இஸ்லாத்தின் பாதுகாப்புப் பணி எந்த அளவுக்கு விரிவடைந்தாலும் மிர்ஸா சாஹிபின் இந்த எழுத்துக்களைப் புறந்தள்ளி விட்டு செய்வது என்பது இயலாத ஒன்றாகும். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபா பக்கம் 45-46) அதாவது அன்னாரின் நூல்கள் இன்றி இஸ்லாத்தின் பாதுகாப்புப் பணி சாத்தியமேயில்லை.

எனவே, இஸ்லாம் அல்லாஹ்வின் இறுதி மார்க்கம் மற்றும் முழுமையான மார்க்கம் என்பதை நிரூபணம் செய்வதற்காகவே அன்னார் அனைத்தையும் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பின் காரணமாகவும், அன்னாரின் மேன்மையை உலகம் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காகவும், உலகிற்கு அதனை அறிவிப்பதற்காகவும் அன்னார் அதனை செய்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கே உண்மையான அந்தஸ்து உள்ளது என்பதையும் முஹம்மதிய மார்க்கத்தைப் போன்று வேறொரு மார்க்கம் இல்லை என்பதையும் மற்ற மார்க்கத்தினருக்கு அன்னார் வெளிப்படுத்திக் காட்டினார்கள். ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாட்டினைப் படிக்க வேண்டும். அதனை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் மேலோட்டமான வெறும் ஆட்சேபனை என்பது அறிவீனத்தின் அடையாளமாக அமைந்து விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நன்றியுணர்வுள்ள ஒரு மாணவனைப் போன்றும், விசுவாசமிக்க தொண்டனைப் போன்றும் தன்னை எப்போதும் குறிப்பிட்டு வந்தார்கள். தமக்கு கிடைத்தவையெல்லாம் தமது எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பு மற்றும் அன்னாரைப் பின்பற்றியதன் காரணமாகவே கிடைத்துள்ளது என்று அன்னார் கூறியுள்ளார்கள்.

இதனை வெளிப்படுத்தியவாறு அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு இறைவன் வஹி அறிவித்தான். அதன் பிறகு இஸ்ஹாக்கிற்கும், பின்னர் இஸ்மாயீலிற்கும், யாக்கூபிற்கும், யூசுஃபிற்கும், மஸீஹ் இப்னு மர்யமிற்கும் இறைவன் வஹி அறிவித்தான். இவர்கள் அனைவருக்குப் பிறகு நமது நபி (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு இறைவன் வஹி அறிவித்தான் என்றால் அன்னார் மீது மிகவும் ஒளிமயமான மற்றும் தூய வஹியை இறக்கினான். அப்படிப்பட்ட அந்த இறைவன் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன்.

அவ்வாறே இறைவன் எனக்கும் அவனுடன் கலந்துரையாடுகின்ற பாக்கியத்தை நல்கினான். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் காரணமாக மட்டுமே எனக்கு இந்த கண்ணியம் கிடைத்துள்ளது. நான் இன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சாராதவனாகவும் அன்னாரை நான் பின்பற்றாமலும் இருந்து, அனைத்து மலைகளின் அளவிற்கு எனது செயல்கள் இருந்திருந்தாலும் எனக்கு இறைவனுடன் உரையாடும் பாக்கியம் ஒருபோதும் கிடைத்திருக்காது. (தஜல்லியாத்தே இலாஹிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 411-412) இந்த விஷயங்களை செவிமடுத்த பிறகும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஒருவர் ஆட்சேபனை செய்கின்றார் என்றால் அவர் அநீதி இழைப்பவரும், அறிவீனரும், குழப்பவாதியும் ஆவார். இது தவிர நாம் வேறொன்றும் கூறுவதற்கில்லை. அவர்கள் தம்மை, பெரும் பெரும் ஆலிம்கள் என்று கூறி வலம் வருகின்றனர். இனி அவர்களின் விவகாரம் இறைவனிடம் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் ஏகத்துவத்தை நிலைநாட்டுதல் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேன்மையை தெளிவுபடுத்தி உலகை அன்னாரின் கொடியின் கீழ் கொண்டு வருதல் ஆகும். அத்துடன் அடியார்களுக்குரிய

உரிமையை வழங்குதல் மற்றும் அல்லாஹ்வின் படைப்பினங்களின் மீதான அனுதாப அறிவை வழங்குதல் மேலும் அதன்படி மனித இனத்தை செயல்பட வைப்பதும் அன்னாரின் வருகையின் நோக்கமாகும். அதன் அடிப்படையில் அன்னார் பைஅத்தின் நிபந்தனைகளில் இந்த நிபந்தனையையும் சேர்த்துள்ளார்கள். இன்னும் சொல்லப்போனால் இரண்டு நிபந்தனைகள் நேரடியாக இதனுடன் தொடர்புடையதாக உள்ளன.

நான்காவது நிபந்தனையில் அன்னார் கூறுகின்றார்கள்: இறைபடைப்பினங்களுக்கு பொதுவாகவும், முஸ்லிம்களுக்கு குறிப்பாகவும் எனது மனக்கிளர்ச்சியினால் எவ்வகையிலும் ஆகுமற்ற துன்பத்தைத் தரமாட்டேன் என பைஅத் செய்யக் கூடியவர் பைஅத் செய்கின்றார். மேலும், அவர் நாவினாலோ கைகளினாலோ வேறு வகையிலோ துன்பம் தரமாட்டேன் என்று உடன்படிக்கை செய்கின்றார். அடுத்து ஒன்பதாவது நிபந்தனையில் இவ்வாறு உள்ளது. இறைப் படைப்பினங்கள் மீதுள்ள அனுதாபத்தில் இறைவனுக்காக மட்டும் தொண்டாற்றுவதில் ஈடுபட்டு வருவேன். என்னால் இயன்றவரை எனக்கு வழங்கப்பட்ட எனது ஆற்றல்களைக் கொண்டு மனித இனத்திற்கு நன்மை செய்வேன். (இஸாலே அவ்ஹாம். ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 564)

இது தொடர்பாக இஸ்லாமிய போதனைகளைக் குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகின்றார்கள்: மார்க்கத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று, இறைவனுடன் அன்பு கொள்ளுதல் மற்றொன்று, பிறரின் துன்பத்தை தனது துன்பமாகக் கருதும் அளவிற்கு மனித இனத்துடன் அன்பு காட்டி அவர்களுக்காக துஆ செய்வதாகும். (நஸீமே த∴வத். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 464)

அடுத்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாமிய போதனையின் அடிப்படையில் இஸ்லாத்தின் அம்சங்கள் இரண்டு மட்டுமேயாகும் அல்லது இஸ்லாமிய போதனைகள் இரண்டு பெரிய போதனையை உள்ளடக்கியது என்று கூடக் கூறலாம். முதலாவது, இறைவனை அறிவதும் அவனிடம் அன்பு கொள்வதுமாகும். மேலும் அவனுக்கான உண்மையான கீழ்ப்படிதலில் தன்னை மாய்த்துக் கொள்வதாகும். கட்டுப்படுதல் மற்றும் அன்பிற்கான நிபந்தனைகளுக்கேற்ப செயல்பட வேண்டும்.

அடுத்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: இரண்டாவது நோக்கம் என்னவென்றால், மனித இனத்திற்கான தொண்டு மற்றும் அனுதாபத்திற்காக தனது அனைத்து ஆற்றல்களையும் திறமைகளையும் செலவிடுவதும் அரசர் முதல் அடிமட்ட மனிதன் வரை தனக்கு நன்மை செய்த நபருடன் நன்றியுணர்வுடனும் அழகிய முறையிலும் நடந்து கொள்வதுமாகும். (துஹ்∴பா கெய்ஸரிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 281)

இறைவன் மீதான அன்பிற்குப் பிறகு அவனது படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதற்கான போதனை இதுவேயாகும் அல்லது இறைவன் மீதான அன்பின் காரணத்தால் அவனது படைப்பினங்களுக்குரிய கடமைகளைச் செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துவதாகும் என்று கூறலாம்.

இது தொடர்பான அன்னாரின் நிலை எப்படி இருந்தது? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்? என்பதை விளக்கியவாறு ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: நான் அனைத்து முஸ்லிம்களுக்கும், கிறித்தவர்களுக்கும், இந்துக்களுக்கும், ஆரியர்களுக்கும் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்கு பகைவர் இல்லை. அதாவது நான் என்னை எதிர்க்கக்கூடிய எவரையும் கூட எனது பகைவராக நான் கருதுவதில்லை.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட அதிகமாக நான் மனித இனத்தை நேசிக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் அதைவிட அதிகமாக நேசிக்கிறேன். உண்மையைக் கொலை செய்யும் பொய்யான கொள்கைகளுக்கே நான் எதிரியாவேன். மனித இனத்தின் மீதான அனுதாபம் என் கடமையாகும். பொய், இணைவைத்தல், கொடுமை போன்ற எல்லா வகையான தீய செயல்கள், நேர்மை யின்மை, அநியாயம், தீய ஒழுக்கம் ஆகியவற்றை வெறுத்து ஒதுக்குவது எனது கொள்கை ஆகும். (அர்பயீன். ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 344)

அடுத்து மேலும் விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஒவ்வோர் உயிரினமும் தமது இனத்துடன் அன்பு கொள்வது வெளிப்படையாகும். எந்தளவுக்கென்றால் சுயநலம் தோன்றாதவரை எறும்புகளும் எறும்புகளை நேசிக்கின்றன.

எனவே இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் நபரின் கடமை என்னவென்றால், அவர் பிறரை மிக அதிகமாக நேசிக்க வேண்டும். எனவே நான் எல்லாரையும் விட மனித இனத்தின் மீது மிக அதிகமாக நேசம் கொள்கிறேன். ஆயினும் அவர்களின் தீய செயல்கள் மற்றும் எல்லா வகையான அநீதிகள், தீமைகள் மற்றும் கிளர்ச்சிகளுக்கு எதிரியாவேன். நான் எந்தவொரு தனி நபருக்கும் எதிரியல்ல. எனவே எனக்கு வழங்கப்பட்டுள்ள சொர்க்கத்தின் அனைத்து அருட்கொடைகள் மற்றும் கருவூலங்களின் திறவுகோலை நான் பாசமிகு உணர்வுடன் மனித இனத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்.

எனக்கு கிடைத்துள்ள செல்வம் உண்மையில் எல்லா வகையான வைரம், தங்கம் மற்றும் வெள்ளியை விட மேலானதாகும். அதனை மிக எளிதாக கண்டறிந்து கொள்ள முடியும். அது அனைத்து வகையான தினார் மற்றும் நகைகளின் மீதான அரச நாணயத்தின் அடையாளமாகும். அரச நாணயத்தின் அடையாளம் என்பதன் பொருள், என்னிடமுள்ள விண்ணின் சாட்சியங்கள் ஆகும். அவை வேறு எவரிடமுமில்லை. அது என்னை உண்மைப்படுத்துகின்றன. எனக்கு சாட்சி பகர்கின்றன.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அனைத்து மார்க்கங்களிலும் இஸ்லாமிய மார்க்கம் மட்டுமே உண்மையானதாகும் என்று எனக்கு கூறப்பட்டது. மேலும் திருக்குர்ஆனின் போதனைகள் எனக்கு கூறப்பட்டுள்ளது. மேலும் திருக்குர்ஆனின் போதனைகள் மட்டுமே நம்பத்தகுந்ததும் மனிதக் கரம் படிவதில் இருந்து தூய்மையானதாகவும் உள்ளது என எனக்கு அறிவிக்கப்பட்டது. அனைத்து நபிமார்களிலும் முழுமையான போதனை நல்கக்கூடியவர் மற்றும் உயர் தரமான நுட்பமான ஞானம் நிறைந்த போதனையை நல்கக்கூடியவர் தமது தூய முன்மாதிரிகளின் மூலமாக மனிதத்துவத்தின் சிறப்புகளை வெளிப்படுத்தக் கூடியவர் எமது தலைவரும் எமது எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மட்டுமேயாவார்கள் என எனக்கு கற்றுத் தரப்பட்டுள்ளது.

நான் அந்த இறைவன் புறமிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியாகவும் உட்புற மற்றும் வெளிப்புற கருத்து வேறுபாடுகளுக்கு நீதி தீர்ப்பவராகவும் இருப்பதாக எனக்கு தூய வஹியின் மூலமாக கூறப்பட்டுள்ளது. எனக்கு மஸீஹ் மற்றும் மஹ்தி என பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு பெயர்களையும் எனக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சூட்டியுள்ளார்கள். பின்னர் இறைவனும் தனது நேரடியான வஹியின் மூலமாக இதே பெயரையே எனக்கு சூட்டியுள்ளான். அடுத்து இதுவே எனது பெயராக இருக்க வேண்டும் என்பது தற்போதைய காலத்தின் தேட்டமாகவும் உள்ளது. (அர்பயீன் எண் 1. ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 345)

அன்னார் இவ்விஷயங்களை வெறும் எழுதுவதற்காக மட்டும் கூறவில்லை அல்லது தமக்கு மனித இனத்தின் மீது அன்பு மிக அதிகமாக இருப்பதாக வெறும் வாதம் மட்டும் செய்யவில்லை. மாறாக அதற்கான செயல் ரீதியான வெளிப்பாடும் அன்னாரின் வாழ்க்கையில் நமக்கு காணக் கிடைக்கின்றது. ஒருபக்கம் தான், மஸீஹ் மற்றும் மஹ்தியாக தோன்றியிருப்பதாக அன்னார் வாதம் செய்கின்றார்கள். மேலும் அந்த வாதத்தின் உண்மைத்துவத்திற்கு சான்றாக அல்லாஹ் அடையாளங்களை வெளிப்படுத்தும் போது அதிலும் குறிப்பாக தண்டனையின் வடிவில் மக்களுக்கு அடையாளமாக அவை வெளிப்படும்போது அன்னார் நிம்மதியிழந்து விடுகின்றார்கள்.

அது தொடர்பாக நாம் பார்க்கின்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டின் ஒரு பகுதியில் வசித்து வந்த மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பிளேக் நோய் பரவி வந்த நாட்களில் ஒவ்வொரு நாளும் ஏராளமான மக்கள் அந்நோய்க்கு இரையாகி மடிந்து வந்தனர்.

மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு துஆ செய்வதை கேட்டேன். அதை செவியுற்று நான் மிகவும் ஆச்சரியத்திற்கு உள்ளானேன்.

மவ்லவி சாஹிப் கூறுகின்றார்கள்: அந்த துஆவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த போது அன்னாரின் குரலில் எந்த அளவுக்கு வேதனை இருந்தது என்றால் அதை செவியுற்றவரின் உள்ளம் உருகி விட்டது. அதை செவியுற்றபோது வியக்கதக்க உணர்வுப்பூர்வமான நிலையில் மனிதனை அது ஆழ்த்தியது. ஒரு பெண் பிரசவ வலியால் துடிதுடிப்பது போன்று அன்னார் வேதனையுடன் மன்றாடினார்கள்; அழுதார்கள். அன்னார் செய்த துஆவை நான் மிகக் கவனமாகக் கேட்டேன். இறைப் படைப்பினங்கள் பிளேக் நோயின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக அன்னார் துஆ செய்து கொண்டிருந்தார்கள். இறைவா! இந்த மக்கள் பிளேக் நோயினால் அழிந்து விட்டால் பின்னர் உன்னை வணங்குபவர்கள் எவர்? என்று துஆ செய்தார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபா பக்கம் 54)

எனவே சிந்தனை செய்யுங்கள். ஒரு முன்னறிவிப்பிற்கேற்ப எதிரிகளின் மீது அந்த தண்டனை இறங்கியது. ஆனால் அன்னார் அந்த தண்டனை அகல்வதற்கு துஆ செய்கின்றார்கள். அந்த தண்டனை அகன்று விடும் பட்சத்தில் எதிரிகள் அன்னாருக்கு எதிராக கூச்சலிடுவதும் சாத்தியமாக இருந்தது. அன்னாரின் முன்னறிவிப்பு ஐயத்திற்கு உள்ளாகி இருக்கும். ஆனால் மனித இனத்தின் மீதான அனுதாபமானது அந்த தண்டனையை சகித்துக் கொள்ளவில்லை. இறைவா! இவர்களை தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக என அன்னார் துஆ செய்தார்கள். மேலும் ஈமானின் பாதுகாப்பிற்கு வேறொரு வழியைக் காட்டுவாயாக! என துஆ செய்தார்கள்.

அனுதாபம் காட்ட வேண்டிய தருணத்தில் அன்னார் அனுதாபம் காட்டவில்லை என அன்னாரின் எதிரிகள் கூட கூற முடியாது. அதற்கு அன்னாரின் வாழ்க்கையில் ஏராளமான சம்பவங்கள் நமக்கு கிடைக்கின்றன. ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன் மினாரத்துல மஸீஹ் கட்டுமானப் பணி துவங்கியதும் இந்துக்கள் கூச்சலிட்டனர். இதன் மூலம் எங்களது குடும்ப பெண்களின் கண்ணியத்திற்கு குறைவு ஏற்படும் என்றனர். அதனை விசாரிப்பதற்கு அரசாங்கத்தின் சார்பாக ஒரு நீதிபதி வந்தார். அவரிடம் அனைத்து விளக்கமும் அளிக்கப்பட்டது. இது ஓர் அடையாளமாக காட்டப்படுகிறது.

ஒளியூட்டப்படும்; இந்தப் பகுதி ஒளிமயமாக இருக்கும். பெண்களின் கண்ணியத்திற்கு எந்த வகையிலும் பாதிப்பு வராது. அது அவர்களின் குடும்ப பெண்களுக்கு பிரச்சனை என்றால் எங்கள் குடும்ப பெண்களுக்கும் பிரச்சனை ஏற்படும். எனவே குடும்ப பெண்களின் கண்ணியம் பாதிக்கும் என்பதெல்லாம் தவறான மற்றும் வீணான காரணங்களாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். நீதிபதியுடன் அங்கு லாலாபூட்டாமால் என்ற ஒருவரும் இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவர் இங்கு காதியானில்தான் வசிக்கின்றார் என்று கூறினார்கள். இவர் எமது அண்டை வீட்டுக்காரர். இந்த ஊரைச் சார்ந்தவர். இவருக்கு தெரியும். நான் எப்போதும் அண்டை அயலார் மற்றும் படைப்பினங்களைக் கருத்தில் வைத்துள்ளேன். உங்களுடன் நிற்கும் இந்து முதியவரான லாலா பூட்டாமாலிடம் கேளுங்கள். இவருக்கு எனது உதவிக்கான தேவை ஏற்பட்டு நான் இவருக்கு உதவி செய்யாமல் இருந்த சந்தர்ப்பம் உண்டா? என்று கேளுங்கள் அல்லது எப்போதாவது இவருக்கு என் புறமிருந்து நன்மை கிடைப்பதற்கு நான் தடையாக இருந்துள்ளேனா?

அடுத்து இந்த லாலா சாஹிபிற்கு எனக்கு தீங்கிழைக்க சந்தர்ப்பம் கிடைத்து இவர் எனக்கு தீங்கிழைக்காமல் இருந்துள்ளாரா? என்றும் இவரிடம் கேளுங்கள். இவர் எப்பொழுதும் எனக்கு நஷ்டத்தையே ஏற்படுத்தி வந்துள்ளார். ஆனால் நானோ எப்பொழுதும் இவருக்கு நன்மையே செய்து வந்துள்ளேன். அந்நேரத்தில் நீதிபதியுடன் நின்று கொண்டிருந்த லாலா சாஹிபிற்கு இவ்விஷயத்தை மறுப்பதற்கான தைரியம் வரவில்லை. மாறாக வெட்கத்தின் வெளிப்பாடாக அவர் நின்று கொண்டிருந்தார். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபா பக்கம் 61-63)

ஆக இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்மாதிரியாகும். பாதிப்பை ஏற்படுத்தியவருக்கும் கூட படைப்பினத்தின் மீதான அனுதாப உணர்வுடன் நன்மையே செய்தார்கள். மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப் எதிர்ப்பின் உச்சத்தை தொட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது குஃப்ர் நிராகரிப்பிற் –கான ஃபத்வா வழங்கினார். தஜ்ஜால் என பெயர் சூட்டினார் – நவூதுபில்லாஹ். அன்னாருக்கு எதிராக நாடு முழுவதும் வெறுப்பு மற்றும் பகைமையின் நெருப்பை மூட்டினார். ஆனால், ஒரு வழக்கில் அன்னாரின் வழக்கறிஞர் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் குடும்பத்தைப் பற்றி மனநெருடலுக்குக் காரணமாக அமையும் சில கேள்விகளைக் கேட்க முற்பட்டபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கண்டிப்புடன் அவ்வாறு செய்வதை தடுத்து விட்டார்கள். வக்கீல் மவ்லவி ஃபஸ்லுத்தீன் சாஹிப் அஹ்மதி அல்லாதவராக இருந்தார். மிர்ஸா சாஹிப் வினோதமான மனிதர். வினோதமான நற்பண்பு –களுக்கு சொந்தக்காரர் என அவர் கூறி வந்தார். ஒரு நபர் அன்னாரின் கண்ணியம் மற்றும் உயிரின் மீது தாக்குதல் நடத்துகின்றார். அதற்குப் பகரமாக அந்த நபரின் சாட்சியை பலவீனப்படுத்த சில கேள்விகள் கேட்க முற்படும்போது நான் இதுபோன்ற கேள்விகளுக்கு அனுமதி தரமாட்டேன் எனக் கூறி உடனே என்னை தடுத்து விட்டார் என்று அவர் கூறுகின்றார்.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் அவர்களைப் பற்றி ஓர் அரபிக் கவிதையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

قَطَعْتَ وِدَادًا قَدْ غَرَسْنَاهُ فِي الصِّبَا     وَلَيْسَ فُؤَادِىْ فِي الْوِدَادِ يُقَصِّرُ

அதாவது, நீர் இந்த அன்பின் மரத்தை உமது கரத்தாலேயே வெட்டி விட்டீர். இளமை பருவத்தில் நாம் எமது உள்ளத்தில் வளர்த்து வைத்திருந்த அன்பின் மரத்தை நீர் உமது கரங்களாலேயே வெட்டி விட்டீர். ஆனால், எனது உள்ளம் எந்நிலையிலும் அன்பு மற்றும் நேசத்தின் விவகாரங்களில் தவறிழைக்கக் கூடியதல்ல. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத்தே தய்யிபா பக்கம் 57-59)

இது ஓர் உதாரணமாகும். அன்னாரின் பிரசாரத்தை அழிப்பதற்கு எண்ணற்ற முஸ்லிம் ஆலிம்கள் முயற்சி செய்தனர். பெயர் தாங்கி ஆலிம்கள் அன்னாரை எதிர்த்தார்கள். அன்னார் மீது குஃப்ர் ஃபத்வா வழங்கப்பட்டது. இப்போது வரை வழங்கி வருகின்றனர். அதன் விளைவாக இன்று வரை முஸ்லிம் நாடுகளிலும் ஏனைய உலக நாடுகளிலும் நமக்கு எதிர்ப்பு ஏற்படுகின்றது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனையின் தாக்கத்தின் காரணமாகவே நாம் எதிரிகளின் ஏச்சுப் பேச்சுகளுக்கு எதிரில் நமது நல்லொழுக்கத்தின் தரத்தை கைவிட்டு விடுவதில்லை. சட்டத்தையும் நாம் கையில் எடுப்பது கிடையாது.

இந்த காலத்தில் மஸீஹ், மஹ்தி மற்றும் நீதி தீர்ப்பவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களே ஆவார்கள். மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் ஏகத்துவத்தை நிலைநாட்டுவது மற்றும் பூமியில் அல்லாமல் உள்ளங்களில் நிலைபெற வேண்டிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆட்சியும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவும் அன்னாரின் ஜமாஅத்தின் மூலமாகவும் மட்டுமே நிலைபெற முடியும். இதை தவிர்த்து எந்த வாளின் மூலமோ துப்பாக்கியின் மூலமோ அல்லது அதிகாரத்தின் மூலமோ அல்லது தீவிரவாதத்தைப் பரப்புவதன் மூலமாகவோ அல்லது இஸ்லாத்தின் பெயரால் அப்பாவி மக்களை கொன்று குவிப்பது மூலமாகவோ அது நிலைபெற முடியாது. இதனை இன்றைய முஸ்லிம்கள் புரிந்திருக்க வேண்டுமே!

ஐரோப்பாவில் இஸ்லாத்தின் பெயரால் தனி நபர் அல்லது அமைப்புகள் நடத்துகின்ற தாக்குதலாக இருக்கட்டும் அல்லது இங்கு இலண்டனில் இரண்டு நாட்களுக்கு முன்பு அநியாயமாக அப்பாவிகள் கொலை செய்யப்பட்டார்கள். சாலையில் சென்ற பாதசாரிகள் மீது காரை ஏற்றி விட்டனர். காவல் துறையைச் சார்ந்தவரும் கொலை செய்யப்பட்டார். இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் தவறாக வழி நடத்தி முஸ்லிம்களின் உள்ளங்களில் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை உரையச் செய்வதற்கு பகரமாக அநீதி மற்றும் காட்டுமிராண்டித்தனமான எண்ணங்களை அவர்களின் உள்ளங்களில் உருவாக்கி விட்டனர். இதன் காரணமாகவே இந்த சம்பவங்கள் நிகழ்கின்றன.

எனவே இதுபோன்ற சூழலில் நான் எப்போதும் கூறி வந்துள்ளேன். இப்போதும் கூறுகின்றேன். இஸ்லாத்தின் அழகை உலகிற்கு முன் எடுத்து வையுங்கள். இது அஹ்மதிகளாகிய உங்களின் பொறுப்பாகும். அஹ்மதியத்தின் எதிர்ப்பைப் பற்றிய கேள்வியைப் பொருத்தவரை இவர்களால் அஹ்மதிய்யத்திற்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை வெற்றி பெறச் செய்வதற்காகவே அனுப்பியுள்ளான். இனி இஸ்லாம் அன்னாரின் மூலமாகவே பரவும். எனவே நாம்தான் இஸ்லாத்தைப் பரப்ப வேண்டும். அப்பாவி மக்கள் கொல்லபடுகின்ற இந்த செயல்களுக்கு நாம் கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும். இதற்கெதிரில் குரல் எழுப்ப வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் நமது பணியாகும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: முழு உலக மக்களே! நன்றாக கேட்டு கொள்ளுங்கள். இது பூமியையும் வானத்தையும் படைத்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் இந்த ஜமாஅத்தை முழு உலகிலும் பரப்பி விடுவான். சான்றுகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் அனைவரின் மீதும் இதற்கு மேன்மையை வழங்குவான். அந்த நாள் வரவுள்ளது. மாறாக அது மிக அருகில் உள்ளது. உலகில் கண்ணியத்துடன் நினைவு கூறப்படும் மார்க்கம் இதுவாகவே இருக்கும். இறைவன் இந்த மார்க்கம் மற்றும் அமைப்பிற்கு அசாதாரண அருள் மற்றும் பரக்கத்துகளை வழங்குவான். இதனை அழிக்க விரும்பும் ஒவ்வொருவரையும் தோல்வியுறச் செய்வான். இந்த வெற்றி கியாமத் வந்து விடும் வரை நிலைபெற்றிருக்கும். இன்று இவர்கள் என்னை எள்ளி நகையாடுகின்றனர் என்றால் அதனால் என்ன நஷ்டம் ஏற்பட்டு விடும்? ஏனென்றால் ஏளனம் செய்யப்படாத எந்தத் தூதரும் தோன்றவில்லை. எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஏளனம் செய்யப்படுவது அவசியமானதாகும்.

يٰحَسْرَةً عَلَى الْعِبَادِ مَا يَأْتِيْهِمْ مِّنْ رَّسُوْلٍ اِلَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ என்று இறைவனே கூறுகின்றான். எனவே இது இறைவன் புறமிருந்து வெளிப்பட்ட அடையாளமாகும். ஒவ்வொரு நபியுடனும் எள்ளி நகையாடப்படுகின்றது. ஆனால் அனைத்து மக்களின் கண்ணெதிரில் விண்ணில் இருந்து ஒருவர் இறங்கினால் வானவர்களும் அவருடன் இருக்கும் பட்சத்தில் அத்தகைய நபரை யார்தான் எள்ளிநகையாடுவார்? எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் விண்ணிலிருந்து இறங்குவார் என்பது வெறும் பொய்யான கற்பனையாகும் என்பதை இந்த ஆதாரத்தின் மூலமாகவும் அறிவுடைய மனிதனால் புரிந்து கொள்ள முடியும்.

நினைவிற் கொள்ளுங்கள்! எவரும் விண்ணில் இருந்து இறங்கி வரமாட்டார். தற்போது உயிருடன் உள்ள நமது அனைத்து எதிரிகளும் மரணித்து விடுவர். ஆயினும் அவர்களில் எவரும் மர்யமின் மகன் ஈஸா விண்ணிலிருந்து இறங்குவதைக் காண மாட்டார். அடுத்து அவர்களுக்குப் பிறகு எஞ்சியிருக்கும் அவர்களின் சந்ததிகளும் மரணித்து விடுவர். அவர்களில் எவரும் மர்யமின் மகன் ஈஸா விண்ணில் இருந்து இறங்குவதைக் காணமாட்டார். அடுத்து சந்ததிகளின் சந்ததிகளும் மரணித்து விடுவர். ஆயினும் அவர்களில் எவரும் மர்யமின் மகன் ஈஸா விண்ணிலிருந்து இறங்குவதைக் காண இயலாது. அப்போது இறைவன் அவர்களின் உள்ளங்களில் பதற்றத்தை ஏற்படுத்துவான். சிலுவை மேலோங்கு –தலுக்கான காலமும் கழிந்து விட்டது. உலகமோ வேறு வடியில் வந்து விட்டது. ஆயினும் இதுவரை மர்யமின் மகன் ஈஸா விண்ணிலிருந்து இறங்க –வில்லையே என பதற்றமடைவர். அப்போது அறிவு படைத்த மக்கள் இக்கொள்கையை முற்றாக கைவிட்டு விடுவர். இன்றைய நாளிலிருந்து மூன்று நூற்றாண்டு கழிந்திருக்காது. அப்போது ஈஸாவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் வெகுவாக நம்பிக்கையிழந்து நிராசையடைந்து இந்த பொய்யான கொள்கையை விட்டு விடுவர். உலகில் ஒரே மார்க்கம் மட்டுமே இருக்கும். ஒரு தலைவர் மட்டுமே இருப்பார். நான் விதை விதைக்கவே வந்துள்ளேன். எனவே எனது கரத்தால் அந்த விதை விதைக்கப்பட்டு விட்டது. இனி அது வளரும்; மலரும். அதை எவராலும் தடுக்க முடியாது. (தஸ்கிரத்துஷ் ஷஹாததைன். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 66-67)

அல்லாஹ்வின் அருளால் மஸீஹால் விதைக்கப்பட்ட அந்த விதை வளர்ந்து மலர்ந்து பரவி வருகிறது. நாம் அதன் பசுங்கிளைகளாக மாற வேண்டும் என்றால், நமது பணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களிலிருந்து கூறப்பட்டது போன்று அல்லாஹ்வின் மீதான அன்பு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது நேசம் மற்றும் சக மனிதர்கள் மீதான அனுதாபம் ஆகியவை நமது ஒவ்வொரு செயலிலும் வெளிப்பட வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான பாக்கியத்தை வழங்குவானாக!

★★★★★

## எல்லாவற்றையும் விட மிக அதிகமாக நான் தரூது ஓதுகின்றேன். ‘‘رَبِّ اِنِّیۡ لِمَاۤ اَنۡزَلۡتَ اِلَیَّ مِنۡ خَیۡرٍ فَقِیۡرٌ’’ என்ற இந்த துஆவும் எனக்கு மிகவும் விருப்பமானதாகும்.

## 13 அக்டோபர் 2016 [வியாழனன்று] கனடாவிலுள்ள ஜமாஅத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்துள்ள இளம் பெண்களுக்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் நடைபெற்ற வகுப்பில் ஹுஸூர் அவர்கள் இளம்பெண்களுக்கு வழங்கியுள்ள பொன்னான போதனைகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

● இமாம் மஹ்தி சய்யிது குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்று எனது தோழி கூறுகின்றார். இதைப் பற்றி தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்? என்று ஒரு பெண் கேள்வி கேட்டார். இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்:

உங்கள் தோழியிடம் இவ்வாறு எங்கு எழுதப்பட்டுள்ளது? என்று கேளுங்கள். சூரா ஜுமுஆ இறங்கியபோது வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் என்ற வசனம் இறங்கிய சமயத்தில் முன்னவர்களை இதுவரை சந்திக்காமல் பிறகு அவர்கள் சந்திக்க இருக்கின்ற ஒரு நபர் பின்னவர்களிலிருந்து தோன்றுவார் என்று அந்த வசனத்தில் கூறப்பட்டிருந்தது. சஹாபாக்கள் இந்த நபர் யார்? என்று கேட்டனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்கு எந்த பதிலும் கூறவில்லை. இரண்டாவது முறை கேட்டபோதும் பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்கு எந்த பதிலும் கூறவில்லை. மூன்றாவது முறையாக அந்தக் கேள்வியை அவர்கள் கேட்டனர். அரேபியர்கள் இருந்த இந்த சபையில் பாரசீகத்தைச் சார்ந்த ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்கள் ஒருவர் மட்டுமே அரபியர் அல்லாத ஒருவராக இருந்தார்கள். அவர்கள் ஈரான் நாட்டைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களது தோளின் மீது பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கையை வைத்தார்கள். மேலும் அவர் (இமாம் மஹ்தி) இவர்களைச் சார்ந்தவராக இருப்பார் என்று கூறினார்கள். இவர்களைச் சார்ந்தவர்கள் என்பதன் கருத்து என்ன? ஒன்று, அவர் பாரசீக வம்சத்தைச் சார்ந்தவராக இருப்பார் அல்லது அவர் அரபியர் அல்லாதவராக இருப்பார். அவர் அரபியர் அல்லாதவராக இருக்கும்போது அவர் எப்படி சய்யிதாக இருக்க முடியும்? இவ்வகையில் அவர் சய்யிதாக இருக்க மாட்டார் என்ற தீர்விற்கு நாம் வருகின்றோம். எனவே அவர் சய்யிதாக இருக்க மாட்டார் என்பதை பெருமானார் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்று தெளிவுபடுத்தி விட்டது. அவர் அரபியராக இருக்க மாட்டார் என்பதையும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறி விட்டார்கள். சய்யிது என்றால் யார்? இங்கு நாம் சய்யிது என்று கூறுகின்றோம். ஆனால் அரேபியர்களிடம் சென்று விட்டால் சய்யிது யார்? என்பதே எவருக்கும் தெரியாது. அங்கு ஒவ்வொரு பிரிவினருக்கும் அவர்களைப் பின்பற்றக் கூடிய மக்கள் இருக்கின்றனர். எனவே உங்கள் தோழியிடம் நீங்கள் கூறுவதை ஏதாவதொரு ஹதீஸிலிருந்து அல்லது திருக்குர்ஆனிலிருந்து நிரூபித்துக் காட்டுங்கள் என்று கூறுங்கள். நாங்கள் கூறுபவற்றை திருக்குர்ஆனிலிருந்து மற்றும் ஹதீஸிலிருந்து நிரூபித்துக் காட்டுகின்றோம் என்று கூறுங்கள். பிறகு மக்கள் அவர் அரேபியர்களிலிருந்து ஏன் வரவில்லை? அல்லது வேறு ஒரு நாட்டில் இருந்து ஏன் வரவில்லை? இந்தியாவின் நிலைமை மட்டும்தான் மோசமாக இருந்ததா? என்று கேட்கின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றிய போது எல்லாவற்றையும் விட பெரிய முஸ்லிம் நாடாக இந்தியாதான் இருந்தது. பெரிய நாடுகளில் ஒரு நாடாக அது இருந்தது. அந்த நாட்டில் பெரும்பாலார் மோசமானவர்களாக இருந்தனர். இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படையிலும் அதன் போதனைகளின் அடிப்படையிலும் முஸ்லிம்கள் இஸ்லாத்தை விட்டும் விலகி வெகு தூரம் சென்று விட்டனர். மூன்று இலட்சம் முஸ்லிம்கள் கிறித்தவர்களாகி விட்டனர். இந்த அளவு கிறித்தவர்கள் அங்கு பிரசாரம் செய்திருந்தனர். இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வரவேண்டிய இடம் அதுவாகத்தான் இருந்தது. அந்த இடத்தில் அவர்கள் வந்தார்கள்.

● ஒரு பெண், எனது சீக்கிய தோழி ஒருவர், உங்கள் ஜமாஅத்தில் ஒருவர் எவ்வாறு முர்தத் ஆக ஆகின்றார் என்று கேட்கிறார் என்று கூறினார்.

இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: ஜமாஅத்திலிருந்து ஒருவர் வெளிறேற்றப்பட்டால் அவர் முர்தத் ஆக ஆகுவதில்லை. சுயமே ஜமாஅத்தை விட்டு விட்டு சென்று விடுபவர்தான் முர்தத் ஆக இருக்கின்றார். இர்திதாத் என்பதன் பொருள் கை விட்டு விடுவது, ரத்து செய்து விடுவது என்பதாகும். அவரையே நாம் முர்தத் என்று கூறுகின்றோம். ஒருவரை நாம் ஜமாஅத் அமைப்பை விட்டும் வெளியேற்றி தண்டனை வழங்குகின்றோம். ஒருவர் மற்றவரது உரிமையைச் செலுத்தாமல் இருந்தால், கணவன் மனைவிக்குரிய உரிமையைச் செலுத்தாமல் இருக்கின்றார் என்று கஸா (நீதித்துறை) தீர்ப்பு கூறினால் அல்லது ஒருவர் மற்றவரை அடித்து விட்டால் அல்லது ஒருவர் மற்றவரது உரிமைகளைப் பறித்து விட்டால் அல்லது எவ்வகையில் அநீதியிழைத்தாலும் அல்லது ஜமாஅத்தின் அமைப்பிற்கு எதிராக செயல்பட்டால் நீங்கள் தவறான வேலையைச் செய்துள்ளீர்கள் என்பதை அவருக்கு தெரிவிப்பதற்காக ஜமாஅத் அவருக்கு ஜமாஅத் அமைப்பிலிருந்து அவரை வெளியேற்றுகின்ற தண்டனையை வழங்குகிறது. அவர்கள் மன்னிப்புக் கேட்டால் திரும்ப வந்து விடுகின்றார்கள். எவர்கள் மன்னிப்புக் கேட்பதில்லையோ அவர்கள் திரும்ப வருவதில்லை. தண்டனை அவர்களுக்கு கிடைக்கத்தானே வேண்டும். தீய செயலை செய்தால் அதற்கு தண்டனை கிடைக்க வேண்டும். எனவே, இஹ்ராஜ் (வெளியேற்றப்படுதல்) என்று நாம் இதைதான் கூறுகின்றோம்.

முஹ்ரிஜ் (வெளியேற்றப்படுபவர்) மற்றும் முர்தத் (சுயமே மார்க்கத்தை விட்டு விட்டுச் சென்று விடுபவர்) ஆகியோருக்கிடையில் வித்தியாசம் இருக்கின்றது. ஒரு பெண் மாற்று மதத்தைச் சார்ந்த ஒருவரை திருமணம் செய்தால் அவர் வெளியேற்றப்படுகின்றார். கேள்வி என்னவென்றால் இஸ்லாம் இது தொடர்பாக என்ன போதனையை தருகின்றது? பெண் தனது கற்பையும் தனது கண்ணியத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. எவர் அவ்வாறு செய்வதில்லையோ அவர் தவறு செய்கின்றார். அந்தப் பெண் இஸ்லாமிய போதனைக்கேற்ப செயல்படவில்லை என்பது தெரிய வரும்போது பிறகு நாம் அவர்களிடம் நீங்கள் இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப செயல்படவில்லை. எனவே எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் இனி எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறி விடுகின்றோம். நாம் அவர்கள் மீது தடியடி நடத்துவதில்லை. அவருடைய தலையை உடைக்கவில்லை. எவரிடமும் எதுவும் கூறவில்லை. நாம் கூறுவது நல்லது; இனி உங்களுக்கும் நமக்கும் இடையில் எந்த தொடர்பும் இல்லை என்பதாகும். உங்களது பெயரை நாங்கள் இனி ஜமாஅத்தில் இடம்பெறச் செய்ய மாட்டோம். உங்களிடம் இருந்து சந்தா வாங்க மாட்டோம். உங்களிடம் இருந்து எந்த தொகையும் வாங்க மாட்டோம். எந்த தாக்கமும் ஏற்படாமல் இருக்கும்போது நீங்கள் எங்கள் மத்தியில் இருப்பதனால் உங்களுக்கு என்ன தாக்கம் ஏற்படப் போகின்றது? எவர்களது தாக்கம் உங்கள் மீது அதிகமாக இருக்கின்றதோ நீங்கள் அவர்களுடனேயே இருந்து விடுங்கள் என்று நாம் அவர்களிடம் கூறி விடுகின்றோம். எனவே இந்த காரணத்திற்காக மட்டுமே அவர்கள் வெளியேற்றப்படுகின்றனர். இஸ்லாம் திருமணம் செய்யுங்கள். உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப திருமணம் செய்யுங்கள் என்று கூறுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொள்வதற்கு மணமகள், மணமகன் ஆகிய இருவரது விருப்பமும் அதில் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஆனால், அவ்வாறு திருமணம் செய்யும்போது கூட அதற்குரிய சரியான வழியில் செல்ல வேண்டும். நீங்கள் திருமணம் செய்து கொள்வதை தாய் தந்தையர் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் பிறகு காலத்தின் கலீஃபாவிற்கு இதுபற்றி நீங்கள் எழுதி அனுப்பலாம். பல பெண்கள் அவ்வாறு எழுதவும் செய்கின்றனர். பிறகு அவர்களது விருப்பத்திற்கேற்ப திருமணம் செய்து வைக்கப்படுகின்றது. நிபந்தனை என்னவென்றால் மணமகன் அஹ்மதியாக இருக்க வேண்டும்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
பதர்
வாரப் பத்திரிகை
காதியான்
Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 27 April 2017 Issue No. 17

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

நீங்கள் எந்த இடத்திற்கும் செல்லுங்கள். எந்த ஒரு கல்லூரி அல்லது பல்கலைகழகத்திற்கு வேண்டுமானால் செல்லுங்கள். எதுவரை என்றால் எந்தவொரு கிளப்பிற்கு வேண்டுமானால் செல்லுங்கள். எல்லா இடங்களிலும் சில வழிமுறைகளும் சட்டதிட்டங்களும் இருக்கின்றன. நீங்கள் அவற்றை மீறி செயல்படும்போது அவர்கள் தங்களிடமிருந்து உங்களை வெளியேற்றி விடுகின்றனர். எனவே, ஜமாஅத்திற்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றிற்கு உள்ளே நீங்கள் இருக்க வேண்டும். ஏனென்றால் அவை அல்லாஹ்வின் கட்டளைகளாகும். ஜமாஅத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்துள்ள பெண்களாகிய நீங்கள் உங்களது மார்க்க அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் இது போன்று புதிதாக எழக்கூடிய கேள்விகளுக்கு சுயமே நீங்களே பதில் கூற வேண்டும்.

● கேள்வி அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களே! முஹர்ரம் மாதம் என்றால் என்ன?

இந்த கேள்விற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: முஹர்ரம் மாதம் இஸ்லாமிய மாதங்களில் ஒரு மாதமாகும். முஹர்ரம் மாதம் 10 ஆம் தேதியன்று இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். ஷியாக்கள் சுயமே யஸீதுடன் சேர்ந்து கொண்டு இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களைக் கொலை செய்தனர். சுயமே அவர்களே தங்களை அடித்துக் கொள்கின்றனர். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அதற்கு பிறகு ஷியா பிரிவு உருவானது. இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பதற்காக சில மக்கள் துக்கம் கடைபிடிக்கின்றனர். சுயமே தங்களை அவர்கள் அடித்துக் கொள்கின்றனர். எனவே, முஹர்ரம் 10 அவர்களுக்கு மிகவும் வேதனைக்குரிய நாளாகும். எனவே இந்த நாட்களில் எவரது திருமணமாவது நடக்க இருந்தால் இந்த நாட்களில் அந்த நிகழ்ச்சியை வைக்க வேண்டாம் என்று நாம் கூறுகின்றோம். குறிப்பாக நமக்கு அக்கம் பக்கத்தில் ஷியாக்கள் இருப்பதனால் நாம் அவ்வாறு நடந்து கொள்கின்றோம். அவர்கள் செய்வது சரியானது என்று நாம் கருதுகின்றோம் என்பதனால் நாம் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. அவர்களது கண்ணியத்தை கருத்தில் கொண்டவாறு நாம் அவ்வாறு நடந்து கொள்கின்றோம். எவராவது அப்போது மின் விளக்குகளால் அலங்காரம் செய்வதாக இருந்தால் செய்யாதீர்கள். உதாரணமாக இங்கு (கனடாவில்) நீங்கள் மின் விளக்குகள் மூலம் அலங்காரம் செய்திருந்தீர்கள். அதை நான் தடுத்து விட்டேன். ஒருவேளை அருகில் ஷியா எவராவது இருந்தால் அவர்களது உணர்வுகளை நாம் காயப்படுத்தி விடக்கூடாது என்பதற்காக அவ்வாறு செய்தேன். ஆனால் அறிவுப்பூர்வமாக பார்க்கும்போது அவர்களது செயல்களுக்கு எந்த ஆதாரமும் இல்லை. எந்நிலையிலும் அநீதியான வழிமுறையை கடைபிடித்தவாறு பெருமானார் (ஸல்) அவர்களின் பேரர் ஷஹீதாக்கப் -பட்டுள்ளார்கள் என்ற இந்த வேதனை நமக்கு ஏற்படத்தான் செய்கின்றது.

● ஜமாஅத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்துள்ள பெண்கள் திருமணத்திற்கு பிறகு தங்கள் வாழ்கையை எவ்வாறு கழிக்க வேண்டும் என்று ஒரு பெண் கேள்வி கேட்டார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: முதலில் நீங்கள் உங்கள் தாய் தந்தையரிடம் கூறி சுயமே இதற்காக முயற்சியும் செய்து எத்தகைய இளைஞரை திருமணம் செய்ய வேண்டும் என்றால் அவர் நல்லவராக இருக்க வேண்டும். மார்க்கப் பற்றுள்ளவராக இருக்க வேண்டும். தொழுகைகளை நிறைவேற்றுபவராக இருக்க வேண்டும். அதன் மூலம் வக்ஃபே நவ் தொடர்பான பணியை நிறைவேற்றுவதில் அவர் தடையை ஏற்படுத்தக் கூடாது. இரண்டாவதாக, திருமணம் நடந்த பிறகு பல்வேறு இயல்பில் உள்ளவர்களோடு உங்களது தொடர்பு ஏற்படும். சில நேரங்களில் அவர்களுடன் ஒத்துப்போவது உங்களுக்கு கஷ்டமானதாக இருக்கும். எனவே, நினைவில் கொள்ளுங்கள். எவரும் முழுமை பெற்ற மனிதராக இருப்பதில்லை. ஒவ்வொருவரிடமும் சிறு சிறு குறைகள், தீமைகள், தவறுகள் இருக்கும். எனவே, ஏதாவதொரு கணவர் அல்லது மனைவி மற்றவரிடமுள்ள குறையைப் பார்க்கும்போது தமது கண்களை மூடிக் கொள்ள வேண்டும். எங்காவது அது பற்றி பேச வேண்டிய தேவை ஏற்பட்டால் அல்லது அது பற்றி கருத்துக் கூற வேண்டியது வந்தால் பிறகு நாவை அடக்கிக் கொள்ளுங்கள். எவராவது உங்களிடம் வந்து உங்களில் ஒருவரிடம் உள்ள குறையை உங்களிடம் கூற விரும்பினால் காதுகளை மூடிக் கொள்ளுங்கள். நல்ல விஷயத்தைப் பார்க்கும்போது நாவால் அதைப் புகழ்ந்து கூறுங்கள். நல்ல விஷயத்தைக் கண்டிப்பாக கேளுங்கள்; பாருங்கள். எனவே, இந்த மூன்று தீமைகளிலிருந்து உங்கள் முகத்தை திருப்பி கொள்ளுங்கள். இந்த மூன்று நல்ல விஷயங்களையும் செய்யுங்கள். இதன் மூலம் வாழ்க்கை எளிதாகி விடும்.

● ஒரு சிறுமி உங்களுக்கு மிகவும் விருப்பமான துஆ எது? என்று ஹுஸூர் அவர்களிடம் கேட்டாள்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், ஒவ்வொரு துஆவும் பல்வேறு சமயங்களில் விருப்பத்திற்குரியதாக ஆகி விடுகின்றது. எல்லாவற்றையும் விட அதிகமாக நான் ஸலவாத்து ஓதுகின்றேன்.

மேலும் رَبِّ اِنِّيْ لِمَآ اَنْزَلْتَ اِلَيَّ مِنْ خَيْرٍ فَقِيْرٌ என்ற இந்த துஆவும் எனக்கு விருப்பமானதாகும். (இந்த துஆவின் பொருள்: என் இறைவா! நீ நன்மையிலிருந்து எதை எனக்கு இறக்கினாலும் அதற்கு நான் தேவையுடையவனாக இருக்கின்றேன்).

---

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

நிலைநாட்டினான். இறுதியாக அன்னாரின் ஆன்மீக அருட்கொடையைப் பெற்றதனால் அவர்களது ஆன்மீக ஒளியாக இறைவன் இந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹை உலகில் அனுப்பியுள்ளான். இஸ்லாம் மார்க்கம் என்னும் கட்டடம் முழுமை அடைவதற்கு இவரது வருகை அவசியமானதாயிருந்தது. ஏனெனில் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்தினருக்கு கொடுக்கப்பட்டது போல் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சமுதாயத்திற்கும் ஆன்மீக முறையில் ஒரு மஸீஹ் கொடுக்கப்படாதவரை இவ்வுலகம் முடியாமலிருப்பது அவசியமானதாக இருந்தது. இதனையே اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ இறைவா! நீ எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக. நீ அருள் புரிந்தவர்களின் வழியைக் காட்டுவாயாக என்ற வசனம் சுட்டிக் காட்டுகிறது. **(1:6-7)** முற்காலத்து சமுதாயங்கள் இழந்து விட்ட அருட்கொடைகளை மூஸா நபி (அலை) அவர்கள் பெற்றார்கள். மேலும் மூஸா நபி (அலை) அவர்களின் சமுதாயம் இழந்து விட்ட அந்த அருட்கொடைகளை ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பெற்றார்கள். தற்போது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சமுதாயமானது மூஸா நபியின் சமுதாயத்தின் பிரதிநிதியாக இருக்கிறது. ஆயினும் முஹம்மதிய சமுதாயமானது மூஸா நபி (அலை) அவர்களின் சமுதாயத்தை விட ஆயிரம் மடங்கு சிறப்புள்ளதாகும். மூஸா நபியின் சமுதாயத்தில் தோன்றிய இப்னு மர்யத்தை விட அவருக்கு ஒப்பானவராக முஹம்மதிய சமுதாயத்தில் தோன்றிய இப்னு மர்யம் மிக உயர்ந்தவராவார்.

காலத்தைப் பொருத்தவரை மூஸா நபி அவர்களுக்குப் பின் பதினான்காவது நூற்றாண்டில் மஸீஹ் இப்னு மர்யம் தோன்றியதைப் போல் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பின் பதினான்காவது நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றியுள்ளார். அது மட்டும் அல்லாமல் மர்யமின் மகன் மஸீஹ் தோன்றிய போது யூதர்களின் நிலை இருந்ததைப் போன்றே முஸ்லிம்களின் நிலை இருக்கும்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றியுள்ளார். நானே அந்த மஸீஹ்!

**(கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 13-14)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad